அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 04/2022

எனது இலக்கம் : EST-3/DICIP/06/0052
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.09.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச உத்தியோகத்தர்களினால் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை தெரிவித்தல்**

2019.02.27 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 06/2019 இன் மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் முதற் தொகுதியின் XXXI ஆம் அத்தியாயத்தின் 3:2 ஆம் உபபிரிவு, தாபன விதிக்கோவையின் இரண்டாம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் மற்றும் 7 ஆம் பிரிவுகள் மற்றும் " சமூக ஊடகங்களுக்கு கருத்துக்களைத் தெரிவித்தல்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 2015.01.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 04/2015 இன் பால் கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. தாபன விதிக்கோவையின் இரண்டம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் மற்றும் 7 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைத் தெரிவித்தல் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 04/2015 இன் 03 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படும் குற்றமாகும்.

03. மேலும், தாபன விதிக்கோவையின் முதலாம் தொகுதியின் XXXII ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவிற்கமைய அரசியல் உரிமைகளை பிரயோகிக்க உரித்தில்லாத உத்தியோகத்தரினால் மேற்கொள்ளக்கூடாத செயலொன்றினை அரசியல் உரிமைகளைப் பிரயோகிக்க உரித்தில்லாத உத்தியோகத்தரினால் சமூக வலைத்தளங்களின் ஊடாக மேற்கொள்வதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குரிய குற்றமாக அமையும்.

04. ஆனபடியால் அப்படியான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

ஒப்பம்./ எம்.எம்.பி.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112-692159
தொலைநகல் : 0112-692158
மின்னஞ்சல் : pubad.estad3@gmail.com